# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM


மலர் : 11 இதழ் : 09 செப்டம்பர் 2025 தனிப்பிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-

Vol : 11 Issue No : 09 September 2025 Single Copy - Rs.20/- Annual Subscription Rs.200/-



இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக...

(1 நாளாகமம் 21:13)


HEAVEN, MY OWN
HEAVEN,
My Own
DR. ANANDA STIRA

# ஆசிரியர் உரை

## Dr. ஜேன் ஜாஷ்வா,



**கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்களை நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறேன்!**

கர்த்தரின் கிருபையினால் நாம் அனைவரும் 2025-ம் வருடத்தின் பெரும்பகுதியை கடந்து, இந்த வருடத்தின் முடிவை நோக்கி சென்றுக் கொண்டிருக்கின்றோம். விசேஷமாக இந்த ஆண்டில் நாம் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறி இருக்கிறோமா? இல்லையென்றால் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற முயற்சி செய்கிறோமா? என யோசித்துப்பாருங்கள். நாட்கள் செல்லச்செல்ல ஆவிக்குரிய வாழ்வில் ஒவ்வொரு நாளும் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்க வேண்டும். **மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். ரோமர் 8:14**

ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளரவேண்டுமானால் நீங்கள் வீணான, உலகப் பிரகாரமான காரியங்களை வெறுத்து தள்ள வேண்டும். பண ஆசை, பொருளாசை, பெண் ஆசை இவைதான் உலகப்பிரகாரமான காரியங்கள் என நினைக்கிறோம். இவை மட்டும் அல்ல.

**பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? 1கொரி. 3:1-3**

பவுல் குறிப்பிட்டுள்ளபடி இன்று நம்மிடையே பொறாமை, வாக்குவாதம், பேதங்கள் என பல காரியங்கள் இருக்கத்தான் செய்கிறது. இத்தகைய மாம்சத்திற்குரிய காரியங்களை நாம் விட்டுவிட்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டு, ஆவிக்குள்ளான ஒரு வாழ்க்கை வாழ முயற்சிப்போம், ஜெபிப்போம்.

ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1000/- ஆயுள் சந்தா ரூ.10000/-

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

கடந்த மாதம் நடைபெற்ற கூட்டங்கள் அனைத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். செப்டம்பர் மாதம் திண்டுக்கல், செகந்திராபாத், தூத்துக்குடி மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

உங்களில் அநேகம் பேர் ஊழியத்தை உற்சாகமாய் தாங்குகிறீர்கள். அதற்காக கர்த்தரை துதிக்கிறேன். பத்திரிக்கை ஊழியம் தொடர்ந்து தடையின்றி நடைபெற ஊக்கமாய் ஜெபியுங்கள்.

நமது Ministry of Jesus You Tube சேனலில் வருகிற எல்லா நிகழ்ச்சிகளையும் பாருங்கள். கூட்டத்தைப் பற்றிய விபரங்களையும் நீங்கள் பார்த்து அறிந்துக்கொள்ள முடியும். வாழ்க்கையை மாற்றக்கூடிய மரணம் என்ற நிகழ்ச்சி Docudrama-ஆக வெளிவந்துள்ளது. இந்த விசேஷ நிகழ்ச்சிகளை பார்த்து பயனடையுங்கள். அநேகருக்கு share பண்ணுங்கள்.

Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எழுதியுள்ள புதிய புத்தகம் 'பரலோகமே என் சொந்தமே' என்று புத்தகத்தை விரைவில் வெளியிட இருக்கிறோம். இதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஊழியத்திற்காகவும், எங்கள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக!

jane@mojindia.org கிறிஸ்துவின் பணியில் Dr. ஜேன் ஜாஷ்வா








# கர்த்தருடைய கரம்

தேவ செய்தி : Rev.Dr.A.ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த புதிய மாதத்திலும் கர்த்தருடைய கிருபையும், ஆசீர்வாதமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

இந்த மாதத்திலும் கர்த்தருடைய வார்த்தையை உங்களோடு பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த தேவனை துதிக்கிறேன். தியானத்திற்காக நாம் எடுத்துக்கொள்ளும் வேத வசனம், **1 நாளாகமம் 21:13 அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன், இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக, அவருடைய இரக்கங்கள் மகா பெரியது, மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக** என்று கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய காத்தினிடத்தில் தாவீது இவ்வாறு கூறுகிறான். காரணம் கர்த்தர் சொல்லாத ஒரு காரியத்தை தான் செய்துவிட்டதால் இவ்வாறு புலம்புகிறான். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலிருந்து வாசிக்கும்பொழுது தாவீது புலம்புவதற்கான காரணத்தை நீங்கள் நன்கு அறிந்துக் கொள்ள முடியும். **1 நாளாகமம் 21:1-ல் "சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடும்படி தாவீதை ஏவிவிட்டது"** என்று எழுதப்பட்டுள்ளது. இஸ்ரவேலை தொகையிடும்படி கர்த்தர் சொல்லவில்லை, தாவீது இதை செய்யும்படி சாத்தான் ஏவுகின்றான். ஆம், இவ்வாறு ஏவி விடுகிற காரியமெல்லாம் பிசாசின் தந்திரம் ஆகும். அதை தாவீது சரியான கோணத்தில் புரிந்துக்கொள்ளவில்லை.

கர்த்தருடைய ஆவியானவர் நல்ல விஷயங்களுக்காக தேவபக்தியுள்ள சிலருக்கு ஏவுதல் தருவதை நாம் வேதத்தில் காணலாம்.

*லூக்கா 2:27-ல் கர்த்தருடைய ஆவியின் ஏவுதலால் சிமியோன் தேவாலயத்திற்கு வந்தான்*

என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் மேற்கூறப்பட்ட சம்பவமோ பிசாசின்

ஏவுதலால் தாவீது இஸ்ரவேலை தொகையிடுகிறான். யோவாபிற்கு தாவீது செய்கின்ற இந்த காரியத்தில் உடன்பாடு இல்லாதபடியால் லேவி, பென்யமீன் கோத்திரங்களை தவிர்த்து, மீதமுள்ள ஜனங்களை தொகையிட ஆரம்பித்துவிட்டான். இந்த தொகையிடுகின்ற காரியம் கர்த்தருடைய பார்வைக்கு மிகவும் விசனமாய் இருந்தது. **இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததானபடியினால் அவர் இஸ்ரவேலை வாதித்தார். (1 நாளா. 21:7)** இதன் விளைவாக "தாவீது தேவனை நோக்கி:

*நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன், இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தை நீக்கிவிடும், வெகு புத்தியீனமாய்ச் செய்தேன். (1 நாளா. 21:8)*

என தேவனிடம் கதறுகிறான். பாவம் செய்கிறதினால் வருகிற பலனை, விளைவை சந்தித்தாக வேண்டும் அது மிகவும் பயங்கரமாக இருக்கும் என்று தெரிந்தபடியால்தான் தாவீது கதறுகிறான். **பாவத்தின் சம்பளம் மரணம்** என்று **ரோமர் 6:23**-ல் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே தான் காத் என்னும் தீர்க்கதரிசியை தேவன் அனுப்புகின்றார். அந்த தேவ மனிதர் தாவீதினிடத்தில் வந்து, 'கர்த்தர் சொல்லாத இந்த காரியத்தை நீர் செய்தபடியால், அதன் பலனை, விளைவை அனுபவித்தே ஆக வேண்டும்' என்று கூறி, மூன்று வாய்ப்புகளை கொடுத்து அதில் ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி தாவீதிடமே அதை விட்டுவிடுகின்றார்.

அந்த மூன்று காரியங்கள் பின்வருமாறு, மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயா? இவைகளில் ஒன்றைத் தெரிந்துக்கொள் என்று கர்த்தர் உரைக்கிறார். இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோகவேண்டும் என்பதை யோசித்துப்பாரும் என தீர்க்கதரிசி கூறுகிறான்.

இந்த மூன்று காரியங்களை கேட்டு தாவீது யோசிக்கிறான். பஞ்சம் வந்தால் மற்ற தேசத்தாரிடத்தில் போய் உணவிற்காக நிற்க வேண்டும். எதிரிகள் ஓட ஓட விரட்டினால் நாம் ஒன்றுமில்லாமல் போய்விடுவோம். எனவே, கர்த்தருடைய கரத்தில் விழுவது தான் ஒரே வழி என தீர்மானம் செய்கிறான். ஏனென்றால், கொள்ளை நோயினால் ஒருசிலர் மரித்தாலும், தேவன் இரக்கம் வைத்து நம்மை காப்பாற்றி விடுவார் என்பதால் இந்த முடிவை எடுக்கின்றான். இந்த முடிவை எடுப்பதற்கு முன் அவன் "நான் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்,

என்ன முடிவு எடுப்பது என்பது குறித்து ஒரு கடினமான சூழ்நிலையில்

*“நான் மனுஷருடைய கரங்களில் விழுவதற்கு பதிலாக கர்த்தருடைய கரத்திலே விழுவேனாக”*

என்று சொல்லி கர்த்தருடைய கரங்களில் விழ தீர்மானிக்கிறான்.

பிரியமான தேவ ஜனமே! கர்த்தருடைய கரம் என்று சொல்லும்பொழுது, வேதத்திலே பல இடங்களில் கர்த்தருடைய கரத்தை குறித்து பல அர்த்தங்களும், பல ஆசீர்வாதமான காரியங்களும் சொல்லப்பட்டுள்ளது. அவற்றுள் ஐந்து குறிப்புகளை மட்டும் இந்த செய்தியில் நாம் பார்க்க இருக்கிறோம்.

## தேவனுடைய கரம் நம்மை உருவாக்கும் கரம்

*உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று. சங்கீதம் 119:73*

ஆதியாகமத்தில் கர்த்தர் மனிதனை மண்ணினாலே உண்டாககினார் தன்னுடைய ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதியவுடன் அவன் ஜீவாத்துமாவானான். தான் உருவாக்கின மனுஷனுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனுஷியாக



உருவாக்கினார். நம்முடைய தேவன் நம்மை உருவாக்குகிறவர். அவர் குயவன், நாம் எல்லோரும் களிமண்ணாக இருக்கிறோம். அவர் நம்மை உருவாக்கினபடியால் நாம் விசேஷித்தவர்களாக, மேன்மை உள்ளவர்களாக காணப்படுகிறோம். அத்துடன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னமே நான் உன்னை அறிந்திருக்கிறேன் என்று அவர் நம்மைப்பார்த்து கூறுகின்றார். நம்மை உருவாக்கின தேவன் நம்மை முன்குறித்தும் இருக்கிறார். அதையே, சங்கீதக்காரன் “அவருடைய கரங்கள் என்னை உண்டாக்கி உருவாக்கின” என கூறுகிறான். நம்மை படைத்த சிருஷ்டிக் கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதமாக படைக்கவில்லை. அனைவரையும் தேவசாயலாகவே படைத்துள்ளார். நிறங்களில் வித்தியாசம் இருக்கலாம், முகதோற்றத்தில் வித்தியாசம் இருக்கலாம் அல்லது உயரத்தில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் எல்லோரையும் தேவனுடைய சாயலில்

படைத்திருக்கின்றார் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அவருடைய சாயலில் நம்மை படைத்த தேவன் தாமே நம்மை ஆசீர்வதித்து பாதுகாப்பதும் நிச்சயம். எனவே நாம் அவருக்குள் இன்னும் அதிகமாக ஸ்திரப்படுவோம். தேவ சாயலைக் காத்துக்கொள்வோம்.

## தேவனுடைய கரம் நம்மை பாதுகாக்கின்ற கரம்

**யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக்காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான், அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். (1 நாளா 4:10)**

பிரியமானவர்களே! யாபேஸின் விண்ணப்பத்தை நீங்கள் தியானிக்கும்பொழுது கர்த்தருடைய கரம் நம்மை பாதுகாக்குகின்ற கரமாக இருக்கிறது என்பதை காண முடியும். அவர் நம்மை பாதுகாக்கின்றார். வீட்டிலிருந்து வெளியில் போகும்பொழுதும், திரும்பி வரும் பொழுதும் அவர் நம்மை பாதுகாக்கின்றார். **“கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். “கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார்” (சங்.121:7,8)**

தேவனுடைய பாதுகாப்பு நம்மோடு கூட இருக்கிறது. கர்த்தர் நம்மை வழி நடத்துகின்ற தேவனாக இருக்கின்றார். மலைகள் விலகலாம், பர்வதங்கள் நிலைபெயரலாம். ஆனால் உங்களை பாதுகாக்கும் தேவ கரம் உங்களை விட்டு, உங்கள் பிள்ளைகளை விட்டு ஒருபோகும் நீங்காது.



யாபேஸ், “உமது கரம் எப்போதும் என்னோடு இருக்கட்டும்” என்கிறான். தேவனுடைய கரம் நம்மோடு இருக்கும்பொழுது எந்த ஒரு மனிதனும் தீங்கு செய்வதற்காக நம்மை நெருங்க முடியாது, நம்மை தொட முடியாது. அவர் தம் கரத்தினால் நம்மை பத்திரமாக பாதுகாக்கிறவராகவே இருக்கிறார். தேவனுடைய கரம் ஆச்சரியமான கரம். நம்மை உருவாக்குவது மாத்திரமல்ல, நம்மை பாதுகாக்கின்ற ஒரு கரமாகவும் இருக்கிறது. இதை நாம் பூரணமாக

நம்பும்பொழுது அற்புதங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

உண்மை சம்பவத்தை உங்களுக்கு கூறுகின்றேன். ஒரு பேருந்தில் அநேகர் பயணம் செய்துக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு வயதான போதகரும் இருந்தார். திடீரென பேருந்து விபத்திற்கு உள்ளானது. ஒரு சிலருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. அநேகர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டு ஜன்னல் வழியாக வெளியே வருவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தனர். அந்த இடிபாட்டில் இந்த போதகரும் சிக்கியிருந்தார். அவருடைய கால்கள் இரண்டும் பேருந்திற்குள் நன்றாக மாட்டியிருந்தது. அவர் சற்று வயதானவர் என்பதால் மற்றவர்களை போல ஜன்னல் வழியாக வெளியே வருவதற்கும் அவரால் இயலவில்லை. சரீரத்தை அசைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் ஒரு சிறிய ஜெபம் மட்டும் செய்தார்

*“கர்த்தாவே! நான் உம்முடைய ஊழியத்தை செய்கிற ஊழியன், நீர் என்னோடு கூட இருக்கிறீர், உமது கரம் இப்பொழுது என்னை பாதுகாக்க வேண்டும்,*

மற்றவர்கள் எனக்கு உதவும் சூழல் இங்கில்லை. எப்பொழுது என்னை காப்பாற்றுவார்கள் என்றும் எனக்கு தெரியவில்லை. எனவே உம்முடைய கரத்தினால் என்னை பாதுகாத்தருளும்” என்று மனதுருகி ஜெபித்தார். கண் இமைக்கும் நேரத்திலே ஒரு கரம் வந்து, அந்த போதகரின் கரத்தை பிடித்தது, அப்படியே அவரை தூக்கி ஜன்னலுக்கு வெளியே விட்டது. ஆகவே அவர் உடலில் எந்த பாதிப்பும் இல்லாமல் பத்திரமாக வெளியே வந்தார்.


ஆம். பிரியமான தேவ ஜனமே! தேவனுடைய கரம் உங்களை பாதுகாக்கின்ற கரம். எந்த கரமும் உங்களுக்கு உதவி செய்ய வர முடியாத நேரத்தில் தேவனுடைய கரம் உங்களுக்கு பாதுகாப்பாக வரும் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். அதனால் தான் பக்தன், “காக்கும் கரங்கள் உண்டெனக்கு காத்திடுவார் தம் கிருபையினாலே” எனப் பாடுகிறான். தேவனுடைய கரங்கள் எப்பொழுதும் உங்களை பாதுகாக்க ஆயத்தமாக இருக்கிறது. உங்களை காக்கிற தேவன் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை. (சங்.121:4)

## தேவனுடைய கரம் நம்மை அணைக்கும் கரம்

*அவர் இடது கை என் தலையின்கீழ் இருக்கிறது, அவர் வலதுகை என்னை அணைத்துக் கொள்ளுகிறது.*
*உன்னதபாட்டு 2:6*

கர்த்தருடைய இடது கை நம் தலையின் கீழ் இருக்கிறது, அவருடைய வலது கை நம்மை அணைக்கிறது.

இவை அரசன் சாலொமோனின் அழகான பாடல் வரிகள் ஆகும். இக்கட்டான நேரங்களில் எந்த உதவியும் யாரிடமிருந்தும் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படலாம், உங்களை உற்சாகப்படுத்துவதற்கு ஆட்கள் இல்லாமல் இருக்கலாம். அந்த நேரங்களில் கர்த்தர் உங்களை அரவணைத்து உற்சாகப்படுத்துவார். தேவனுடைய வலதுகை உங்களை அணைத்துக்கொள்ளும்.



உங்களை அரவணைப்பதற்கும், அணைப்பதற்கும் உங்களை உற்சாகப்படுத்துவதற்கும் ஒருவர் உண்டு. அவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் பாவத்தை வெறுக்கிறவர், பாவியை நேசிக்கிறவர். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்வே தள்ளுவதில்லை என்றும் இயேசு சொல்லியிருக்கிறார். வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி தகப்பன் தன் இளைய குமாரனுக்காக பல நாட்கள் காத்திருந்தது போல கர்த்தர் உங்களுக்காக காத்திருக்கிறார். உங்களை அரவணைப்பதற்காக அவர் காத்திருக்கிறார். நீங்கள் மிகவும் சோர்ந்து போய் இருக்கும் பொழுது கர்த்தர் உங்களுக்கு பெலன் கொடுப்பார், சத்துவமற்று காணப்படும் நேரத்திலே உங்களுக்கு சத்துவத்தை கொடுப்பார். தேவனுடைய அரவணைப்பு இருந்தாலே போதும். வாழ்க்கையில் உயர்வான நிலைக்கு நீங்கள் வந்துவிடுவீர்கள். ஏனென்றால், அவர் உங்களுடைய பரம தகப்பன். பெற்றோர் தன் குழந்தைகளை அரவணைத்துக்கொள்வது, அந்த குழந்தைக்கு பெரிய மகிழ்ச்சியை தருகிறது. சில நேரங்களில் இந்த உலகத்தின் பாடுகள், கஷ்டங்கள், போராட்டங்கள் உங்களை நெருக்கி வரும்பொழுது பரம தகப்பனுடைய அரவணைப்பு உங்களுக்கு பெரிய ஆறுதலாக இருக்கும். ஒரு தைரியத்தை கொடுப்பதாகவும் இருக்கும். தேவனுடைய அரவணைப்பு உங்களுக்கு ஒரு உற்சாகத்தை தந்து அடுத்த காரியத்தை செய்வதற்குரிய உத்வேகத்தை கொடுத்து வழிநடத்துவதாகவும் இருக்கிறது. இது தான் அவருடைய அரவணைக்கும் கரத்தின் மேன்மையாக இருக்கிறது.

அன்பானவர்களே! நீங்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்கும்பொழுது, அவருக்கு பிரியமாக

வாழும்பொழுது அவருடைய கரங்கள் உங்களை அரவணைத்து, வழி நடத்துவதற்கு உண்மை உள்ளதாக இருக்கிறது. தேவனுக்கு பிள்ளைகளாக நீங்கள் இல்லாத பட்சத்தில் அவர் எப்படி உங்களை அரவணைக்க முடியும்? அவருக்கு பிரியமில்லாத ஒரு வாழ்க்கை வாழும் பட்சத்தில் அவர் எப்படி உங்களை அரவணைக்க முடியும்? அன்பானவர்களே! அவர் உங்களை அரவணைக்க வேண்டும் என்றால் நீங்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும். அவருடைய பிள்ளையாக இருந்து "கர்த்தாவே உம்முடைய கரம் என்னை தேற்றட்டும், அரவணைக்கட்டும் என்று கேட்கும்பொழுது நிச்சயம் அவர் உங்களை தேற்றுவார், அரவணைப்பார்" கலங்காதீர்கள்! உன்னதபாட்டு 2:16ல் எழுதப்பட்டுள்ளது போல,

*"என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்"*

என உரிமை கொள்ளும்பொழுது அவர் உங்களை அணைத்துக்கொள்வார்.

## தேவனுடைய கரம் நமக்கு சுகமளிக்கும் கரம்

"அவர் தமது கையை நீட்டி, **அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார், உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று" (லூக்கா 5:13)**

அந்த காலங்களில் குஷ்டரோகிகள் அருவருக்கப்பட்டவர்கள், ஊருக்கே புறம்பே இருப்பார்கள். அவர்கள் இருக்கிற பக்கமே யாரும் போகமாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து தமது கையை நீட்டி குஷ்டரோகம் உள்ள அந்த மனிதனை தொட்டு சுகமாக்குகிறார். இயேசுவின் ஒரு தொடுதலால் அந்த மனிதனின் குஷ்டரோகம் முழுதும் நீங்கியது. இயேசு தொட்டால் போதும், நீங்கள் சுகமடைவீர்கள். அவர் தொட்ட அனைவரும் சுகமடைந்தார்கள் என்று வேதம் சொல்கிறது. யாரை எல்லாம் அவர் தொட்டாரோ, அவர்கள் எல்லாம் சுகத்தை பெற்றுக்கொண்டார்கள். அன்பானவர்களே! கர்த்தர் உங்களை தொட வேண்டும். பெலவீனமாய் இருக்கிறீர்களா? நோய்வாய்ப்பட்டு செய்வதறியாது திகைத்து நிற்கிறீர்களா? கலங்காதீர் கள்!

ஏசாயா தீர்க்கதரிசி, எசேக்கியா ராஜாவிடம் போய் **"நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** என்கிறான். எசேக்கியா தன் முகத்தை சுவர்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி, **"ஆ, கர்த்தாவே நான் உனக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்**

**பண்ணினான், எசேக்கியா மிகவும் அழுதான்"(2இராஜா.20:3)** எசேக்கியா தேவனை நோக்கி ஜெபித்து, அழுகிறான். அவனுடைய அந்த அழுகுரலை தேவன் கேட்டார், சுகப்படுத்தினார். ஏசாயா அரண்மனையின் பாதி முற்றத்தைவிட்டு, சற்று கடந்துபோகிறதற்கு முன்பு, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, நீ எசேக்கியா ராஜாவிடம் திரும்பிச் சென்று, **"உன் விண்ணப்பத்தை கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன், இதோ நான் உன்னைக் குணமாக்குவேன், உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களை கூட்டுவேன்"** என சொல்லும்படி சொன்னார். எவ்வளவு ஆச்சரியமான சம்பவம் பாருங்கள். சிறிது நேரத்திற்குள் கர்த்தருடைய கரம் எசேக்கியாவை தொட்டு சுகமாக்கியது.



ஆம் பிரியமானவர்களே! அதே தேவன் இன்றும் உங்கள் மத்தியில் ஜீவிக்கிறார். கர்த்தருடைய கரம் உங்களையும் சுகமாக்கும். சகல வியாதிகளையும் உங்களைவிட்டு விலக்கும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். **"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச்சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5)**

# தேவனுடைய கரம் நம்மை ஆசீர்வதிக்கும் கரம்

*(இயேசு) அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். மாற்கு 10:16*

அன்பான தேவ பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் கரம் உங்களை எப்பொழுதும் ஆசீர்வதிக்கும் கரமாக இருக்கிறது. இயேசு குழந்தைகளை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதிக்கிறார். இயேசுவின் கரம் நம்மோடு இருக்கும் பொழுது தரித்திரம் நம்மைவிட்டு ஓடிப்போகும். குறுக்கு வழிகளில் சென்று அதன்மூலம் ஆசீர்வாதமாக வாழமுடியாது. அது ஒருபோதும் நிலைக்காது. துரிதமாய் வரும் ஆசீர்வாதம் நிலைத்திராது, கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும், அதினோடே அவர் வேதனையை கூட்டார்.

**பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். (லூக்கா 24:50)**

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு "தம் கைகளை உயர்த்தி" சீஷர்களை ஆசீர்வதிக்கின்றார். ஆம் அவருடைய கரம் ஆசீர்வதிக்கின்ற கரம். அன்றைக்கு இயேசு சீஷர்களை ஆசீர்வதித்தது போல. இன்றைக்கும் அவருடைய ஊழியத்தை செய்கின்ற ஆசாரியர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு கிருபையின் ஆசீர்வாதத்தை, அபிஷேகத்தை கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம், என வேதாகமம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. கர்த்தருடைய நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம். நீங்கள் ஒவ்வொரு முறையும் ஆலயத்திற்குள் வரும்பொழுது, தேவனுடைய சந்நிதியிலிருந்து ஆசாரியன் இயேசுவின் நாமத்தில் உங்களை ஆசீர்வதிக்கும்பொழுது உங்கள் வாழ்க்கையே ஆசீர்வாதமாய் மாறுகின்றது. இன்றும் தேவனுடைய கரம் அவருடைய ஊழியத்தை உண்மையாய் செய்கின்ற ஊழியர்கள் மூலமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

பிரியமானவர்களே! மேற்கூறப்பட்ட ஐந்து காரியங்களையும் உங்கள் ஐந்து விரல்களைப் போல பாவித்து அதை ஆழமாக உங்கள் மனதில் பதித்துக்கொள்ளுங்கள். முதலாவது தேவனுடைய கரம் உங்களை நேர்த்தியாக அருமையாக உண்டாக்கி, உருவாக்குகிற கரமாக இருக்கின்றது. இரண்டாவது எல்லா இடங்களிலும் தேவனுடைய கரம் உங்களை பாதுகாக்கின்றது. மூன்றாவதாக கைவிடப்பட்ட சூழலில் தேவனுடைய கரம் உங்களை அரவணைக்கும் கரமாக செயல்படும். நான்காவதாக கர்த்தரின் கரம் நோய்களின் மத்தியில் உங்களுக்கு அற்புத சுகமளிக்கும் கரமாக இருக்கிறது. ஐந்தாவதாக தேவ கரம் எப்பொழுதும் உங்களை ஆசீர்வதிக்கும் கரமாகவும் இருக்கிறது.

**இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான், அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான் (எஸ்றா 7:6)**

அன்பானவர்களே! கர்த்தருடைய கரம் எஸ்றாவின் மேல் இருந்தது. புறஜாதிகள் நிறைந்த ஒரு இடம். அஞ்ஞானிகள் மத்தியில் வாழுகின்ற ஒரு சூழல். இந்த நிலையில் தேவனுடைய கரம் அவன் மேல் இருந்தததினால் அவன் வேண்டிக்கொண்ட அனைத்தும் அவனுக்கு கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய கரம் ஒருபோதும் அவனைவிட்டு நீங்கவில்லை.

இந்த செய்தியை வாசித்துக்

கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே, எஸ்றாவைப் போல தேவனுடைய கரம் என் மேல் இருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா? அவருடைய கரம் என் மேல் இருக்கிறது என்று நீங்கள் தைரியமாய் எப்பொழுது சொல்கிறீர்களோ, அப்பொழுதுதான் அவர் உங்கள் மத்தியில் கிரியை செய்வார், உங்களை ஆசீர்வதிப்பார், உங்களை மேன்மைப்படுத்துவார். கர்த்தருடைய கரம் உங்களோடிருந்து உங்களை ஆசீர்வதிக்கும், மேன்மைப்படுத்தும், பாதுகாக்கும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!















**பங்காளர்கள் கவனத்திற்கு...**

உங்கள் குடும்பத்திற்கு அன்பரின் ஊழிய பத்திரிக்கை யார் பெயரில் வருகிறதோ அவர்களுடைய பிறந்த நாள், தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் பங்காளர் எண் ஆகியவற்றை எங்களுக்கு கடிதம் அல்லது வாட்ஸ் அப் மூலமாக தெரியப்படுத்துங்கள். அலுவலக கம்ப்யூட்டரில் பதிவு செய்வதற்கு அவசியம் தேவைப்படுகிறது.

Ministry of Jesus - Whats App Mobile: 9500487059

# துதி அறிக்கை

## ஆஸ்துமா நீங்கியது!



15 வருடங்களுக்கு முன் என்னுடைய உறவினர் மூலமாக அன்பரின் ஊழியத்தைக் குறித்து அறிந்து கூட்டத்திற்கு வந்து கலந்துக்கொண்டேன். என்னுடைய ஆஸ்துமா பிரச்சனையினால் அதிக கஷ்டங்களை அனுபவித்து வந்தேன். தனி ஜெபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நேரமே கொடிய ஆஸ்துமா நோயிலிருந்து  பரிபூரண விடுதலை பெற்றேன். அந்த நாளிலிருந்து கடந்த 15 வருடங்களாக நான் நல்ல சுகத்துடன் வாழ்ந்து வருகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**-திரு. மனோகர், விஜயவாடா.**

## மனபாரம் நீங்கியது



எங்கள் மகனின் நிமித்தம் நான் மிகுந்த மனபாரத்துடன் இருந்தேன். கூட்டத்திற்கு வருவதற்காக காலையில் எழுந்தப்பொழுது என் கால்கள் இழுத்துக் கொண்டு எழும்ப முடியாத நிலையில் கஷ்டப்பட்டேன். கர்த்தர் தான் எனக்கு பெலன் கொடுத்து சென்னை கூட்டத்திற்கு அழைத்து வந்தார். உள்ளே நுழையும்பொழுதே  Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கூறிய வார்த்தைகள் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. இந்த கூட்டத்தின் வாயிலாக பரிசுத்த ஆவியானவர் என்னுடன் பேசி எனக்கு நம்பிக்கையை தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## திருமணம் நடைபெற்றது



எங்கள் பேரனுக்கு முப்பது வயதாகியும் திருமணம் நடைபெறாமல் தடையாகவே இருந்தது. கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். தனி ஜெபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் Mrs. மார்கிரேட் ஸ்திரா இருவரும் என் பேரனுடைய திருமணத்திற்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் இரங்கினார். கடந்த ஏப்ரல் மாதம் பேரனுடைய திருமணம் கானாவூர் திருமணத்தைப் போன்று சிறப்பாக நடைபெற்றது. தேவனுக்கே மகிமை.

**திருமதி. சீதாலெட்சுமி, சென்னை.**

## அன்பரின் ஊழிய பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான காரியங்கள்!



நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். ஒரு நாள் அன்பரின் ஊழிய கூட்டம் நடைபெறுகின்ற விபரம் அடங்கிய நோட்டீஸ் ஒன்று எனக்கு கிடைத்தது. அதைப்பார்த்து நான் முதன்முறையாக கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். அந்த நாளிலிருந்து தேவ சமாதானத்தை பெற்றுக்கொண்டேன். வேதாகமத்தை அதிகமாக வாசிக்க ஆரம்பித்தேன். கர்த்தர் என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார்.

என்னுடைய மூத்த மகளைக் குறித்து அதிக கவலையுடன் இருந்தேன். ஐயா அவளுக்காக ஜெபித்துவிட்டு, கர்த்தர் அவளுக்கு இருக்கிற ஞானத்தை அதிகப்படுத்துவார், அவள் மருத்துவராக பணி செய்வாள் என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். அதன்படியே தற்பொழுது மகள் MD முடித்து Critical care-ல் சிறப்பு மருத்துவராக பணி செய்து வருகிறாள்.

என்னுடைய 2-வது மகனுக்கு பெரிய அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதன்பின் அவனுடைய கண், கை, கால்கள் எல்லாம் Leucoderma என்ற வெண் படலம் ஏற்பட்டது. அதற்காக பல சிசிக்சைகளை மேற்கோண்டோம். எந்த பயனும் இல்லை. கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் Mrs. மார்கிரேட் ஸ்திரா அம்மா இருவரும் மகனுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த வெண் படலம் அப்படியே

காணாமல் போய்விட்டது.

இத்தனை நன்மைகளை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். சகோதரர் குடும்பத்திற்கும் ஊழியத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**திரு. மூர்த்தி கிங்ஸ்லி,சென்னை.**

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



என்னுடைய முதல் பிரசவம் மிகவும் இக்கட்டான நிலையில் தான் பிரசவித்து முதல் குழந்தை பிறந்தது. இரண்டாவது முறை கருவுற்றப்பொழுது பரிசோதனைக்கு சென்றேன். அப்பொழுது எனக்கு பிரஷர் அதிகமாக இருப்பதால் நார்மல் டெலிவரியில் குழந்தை பிறக்காது, ஆப்ரேஷன் செய்ய வேண்டியிருக்கும் என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். ஆகவே நான் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து, ‘எனக்கு ஆப்ரேஷன் இல்லாமல் சுகபிரசவத்தில் குழந்தை பிறக்க வேண்டும்’ என பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். பிரசவ நேரத்தில் குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. மிகவும் இக்கட்டான நிலையில் தான் இருந்தேன். ஆனால் கடைசி பத்து நிமிடத்தில் ஆண்டவர் அற்புதமாக சுகபிரசவத்தில் குழந்தையை நல்ல சுகத்துடன் பெற்றெடுக்க கிருபை செய்தார். என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.

**திருமதி. ஜெனிபர், திருச்சி**

## ஜெபத்தைக் கேட்டு விரைவில் சுகம் தந்தார்!



நான் தபால் துறையில் வேலை செய்துக்கொண்டிருக்கிறேன். என் நண்பர் மூலமாக அன்பரின் ஊழியத்தைக் குறித்து அறிந்து கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். கடந்த வருடத்தில் ஒரு நாள் நானும் என் மகளும் இரு சக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்தப்பொழுது திடீரென ஒரு விபத்தில் சிக்கிக்கொண்டோம். கம்பி என் எலும்புக்குள் சென்று குத்தி நின்றது. எங்கள் இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். நான் ஆம்புலன்ஸில் இருந்து அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்து எனக்காக ஜெபிக்கும்படி

என் நண்பரிடம் சொன்னேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, நாங்கள் இருவரும் விரைவில் சுகம் பெற உதவி செய்தார். தற்பொழுது நான் வேலைக்கு சென்றுக்கொண்டிருக்கிறேன். சுகம் தந்த கர்த்தரை துதிக்கிறேன். **திரு. பிரசாந்த், திருச்சி.**

## தீங்கை காணாதிருப்பாய்!



ஒரு நாள் நள்ளிரவில் என் அப்பா போன் செய்து என் தம்பிக்கு விபத்து ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என சொன்னார்கள். நான் இரவு முழுவதும் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது Ministry of Jesus You Tube சேனலில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் தீங்கை காணாதிருப்பாய் என்ற செய்தியை கேட்டேன். மிகுந்த ஆறுதலாக இருந்தது. காலையில் தம்பி கண்விழித்து பார்த்தான். தம்பியின் இடது கன்னத்தில் எலும்பு நொறுங்கிவிட்டது. ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என சொல்லிவிட்டார்கள். உடனே நான் அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்து என் தம்பிக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் இரங்கினார். ஆப்ரேஷன் இல்லாமல் தம்பி சுகம் பெற்று வருகிறான். அற்புதம் செய்த கர்த்தரை துதிக்கிறேன். **-திருமதி.கிரிஜா, திருச்சி.**

## பெரிய கட்டி மறைந்தது! வளைந்த கால் பாதம் நேரானது!



என்னுடைய கழுத்தில் 15 வருடங்களுக்கு முன்பு ஒரு பெரிய கட்டி இருந்தது. மருத்துவர்கள் ஆப்ரேஷன் செய்து எடுக்க வேண்டும் என சொல்லியிருந்தார்கள். அதனால் மிகுந்த மனக்கலக்கத்துடன் இருந்தேன். அந்த நாட்களில் அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் அதிசயம் செய்தார். ஆப்ரேஷன் செய்யாமலே என் கழுத்திலிருந்து அந்த பெரிய கட்டி மறைந்துவிட்டது. இன்று வரை நான் நல்ல சுகத்துடன் வாழ்ந்து வருகிறேன். சுகம் தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். என்னுடைய தம்பிக்கு பிறந்த பெண் குழந்தையின் கால் பாதம் வளைந்து காணப்பட்டது. ஐயா குழந்தையைத் தொட்டு மனதுருக்கத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு பின் கால் பாதம் இயல்பான நிலைக்கு வந்துவிட்டது. இப்பொழுது தம்பி மகள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறாள். தேவனுக்கே மகிமை! **திருமதி. சுபா, சேலம்.**

# செப்டம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

**செப்டம்பர் 01**
அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி, தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, …என்னைத் தமது அம்பாறாத்தூணியிலே மூடிவைத்தார். (ஏசாயா 49:2)

**செப்டம்பர் 02**
உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும். (சங்.138:7)

**செப்டம்பர் 03**
இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார். (1இராஜா.8:15)

**செப்டம்பர் 04**
கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண், நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. (ஏசாயா 64:8)

**செப்டம்பர் 05**
கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்தசத்தமிடுவேன். (சங்.92:4)

**செப்டம்பர் 06**
என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசா.41:10)

**செப்டம்பர் 07**
கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது. (யாத்தி.15:6)

**செப்டம்பர் 08**
யூதாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே, ராஜாவும் பிரபுக்களும் கட்டளையிட்ட பிரகாரம் செய்கிறதற்கு, தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று. (2நாளா.30:12)

**செப்டம்பர் 09**
எங்கள் தேவனுடைய கரம் எங்கள்மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத் தப்புவித்தது. (எஸ்றா 8:31)

**செப்டம்பர் 10**
உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். (சங்.108:6)

**செப்டம்பர் 11**
கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது. (லூக்கா 1:66)

**செப்டம்பர் 12**
நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. (சங்.102:25)

**செப்டம்பர் 13**
நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். (ஏசாயா 51:16)

**செப்டம்பர் 14**
…எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். (1நாளா.29:12)

செப்டம்பர் **15** என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார். (நெகே.2:8)

செப்டம்பர் **16** உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது. (சங்.18:35)

செப்டம்பர் **17** அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள், அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். (சங்.111:7)

செப்டம்பர் **18** உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது. (2நாளா.20:6)

செப்டம்பர் **19** தமது வலதுகரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து, தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார். (சங்.20:6)

செப்டம்பர் **20** என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன். (எரே.16:21)

செப்டம்பர் **21** அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான்.(எஸ்றா 7:6)

செப்டம்பர் **22** எங்கள் தேவனுடைய கரம் எங்கள்மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத் தப்புவித்தது. (எஸ்றா 8:31)

செப்டம்பர் **23** அவனுடைய வில் உறுதியாய் நின்றது, அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. (ஆதி.49:24)

செப்டம்பர் **24** உமக்கு வல்லமையுள்ள புயமிருக்கிறது, உம்முடைய கரம் பராக்கிரமமுள்ளது. (சங்.89:13)

செப்டம்பர் **25** உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது. (சங்கீதம் 63:8)

செப்டம்பர் **26** உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக. (சங்கீதம் 119:173)

செப்டம்பர் **27** உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷ குமாரன்மீதிலும் இருப்பதாக. (சங்.80:17)

செப்டம்பர் **28** உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் (1நாளா.4:10)

செப்டம்பர் **29** உம்முடைய வலதுகரம் உன்னதமானது. (சங்.89:13)

செப்டம்பர் **30** நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய். (ஏசாயா 62:3)

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)






**உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். நீதி. 11:25**

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பட்டியில் நமது **S.J.SAVES TRUST** மூலம் நடத்தப்பட்டு வருகிற மாலை நேர டியூஷன் வகுப்பிற்கு ஏழை, எளிய மாணவ மாணவியர்கள் பலர் வந்து படித்துச் செல்கின்றனர். கடந்த ஜுன் மாதம் 29-ம் தேதி அன்று அவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு **Bro.** ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா அவர்கள் வருகைப்புரிந்து மாணவ மாணவியர்களை சந்தித்தார்கள். அதன்பின் மாணவ மாணவியர்களுக்கு School Bag, Lunch Bag, வாட்டர் பாட்டில், டிபன் பாக்ஸ், பென்சில் பாக்ஸ், பேனா, பென்சில், ரப்பர், நோட்டு வகைகள், பயிற்சி ஏடுகள், ஆகியவற்றை பிள்ளைகளுக்கு வழங்கினார்கள்.

**S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/C.Name : SJ SAVES TRUST**
**Account No : 019150310875369**
**Bank Name : Tamilnadu Mercantile Bank**
**Branch : Palakarai, Trichy.**
**IFSC Code : TMBL 0000019**
**A/C Type: Current**

# S.J.SAVES TRUST– ன் புதிய திட்டம்

12-ம் வகுப்பை முடித்து கல்லூரிக்கு செல்லமுடியாத நிலையில் உள்ள மாணவ மாணவியர்கள் குடும்பத்தின் சூழ்நிலை நிமித்தமாக கூலி வேலை, நூறு நாட்கள் வேலை மற்றும் இதர வேலைகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது. அவர்களுக்கு நமது TRUST மூலமாக கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய இருக்கிறோம்.

நம்முடைய பிள்ளைகள் உயர்தர கல்விகளை பெற்று சிறப்பாக இருக்கும்பொழுது, படிக்க வசதியில்லாத ஏழை, எளிய மாணவ மாணவியர்களை நினைவில் கொண்டு அவர்களுடைய மேற்படிப்பிற்கு நீங்களும் உதவி செய்யலாம்.








சேலம் மாவட்டத்திலுள்ள கருமாபுரம், புது காடு, மின்னாம்பள்ளி, சென்னியம்மன் நகர், நாட்டாமங்கலம், M.பெருமாபாளையம் ஆகிய ஊர்களில் உள்ள பிள்ளைகள் நம் டியூஷன் சென்டரில் படித்து வருகிறார்கள். அவர்கள் படிப்பிற்கு தேவையான நோட்டுகள், பேனா, பென்சில் ரப்பர், ஸ்கேல், ஜாமன்றி பாக்ஸ் போன்ற கல்வி உபகரணங்கள் மற்றும் School Bag, Lunch Bag, டிபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில் அனைத்தும் S.J.SAVES TRUST மூலம் வழங்கப்பட்டது.

Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிள்ளைகளின் உடல் நலனை கருத்தில் கொண்டு சத்து மாவு, டானிக், சிரப் ஆகியவற்றை பிள்ளைகளுக்கு வழங்கினார்கள். அத்துடன் பிள்ளைகள்நன்றாக படிப்பதற்கான அறிவுரைகளை கூறி, அவர்கள் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வருவதற்கான ஆலோசனைகளை கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அத்துடன் மதிய உணவாக சிக்கன் பிரியாணி, இனிப்பு மற்றும் கார வகைகள் பிள்ளைகளுக்கு தரப்பட்டது.



# உலக செய்திகள்



உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்க அதிபர் டிரம்ப், அலாஸ்கா நகரில் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக இருந்ததாக இரு தலைவர்களும் தெரிவித்தனர்.



தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் கனமழை பெய்து வந்தது.

ஆகஸ்ட் 18ம் தேதி மட்டும் 8 மணி நேரத்தில் 18 செமீ மழை பெய்ததால் மும்பை நகரமே வெள்ளக்காடாக மாறியது. இதனால் விமான சேவை, ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. மழை வெள்ளத்திற்கு 7 பேர் பலியானதாக அம்மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார். கனமழை காரணமாக பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவின் லட்சிய திட்டமான மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ‘சுகன்யான்’ திட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டவர் சுபான்ஷு சுக்லா. இவர் நாசா மற்றும் ‘ஆக்சியம் ஸ்பேஸ்’ என்னும் தனியார் நிறுவனம் சார்பில் ‘ஆக்சியம் -4’ திட்டத்தின் கீழ் சர்வதேச விண்வெளி மையத்துக்கு 3 பேருடன் அனுப்பி வைக்கப்பட்டார். கடந்த ஜுன் 25ல் அமெரிக்காவின் புளோரிடாவில் இருந்து புறப்பட்ட இவர்கள் சர்வதேச விண்வெளி மையத்தை மறுநாள் அடைந்தனர். கடந்த ஜுலை 15ல் பூமிக்கு திரும்பினர். சர்வதேச விண்வெளி மையத்தில் விவசாயம் உட்பட பல ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்தப் பயணம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்ற முதல் இந்தியர் என்ற பெருமை சுவான்ஷு சுக்லாவுக்கு!

# பரலோகமே என் சொந்தமே!

# Heaven, my own!

## கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

இந்த கடைசி காலத்தில் ஜனங்கள் தங்கள் நம்பிக்கைகளுக்கு ஏற்றவாறு பல கொள்கைகளை கடைபிடிக்கிறார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் மோட்சம், நரகம், பாதாளத்தை குறித்து பல்வேறு சந்தேகங்களோடு இருக்கிறார்கள். சிலர் மரித்த பிறகு பாதாளத்திலிருந்து இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் நிரந்தரமாக மோட்சம் சென்றிருக்கிறார்கள். ஆனால் இதுவரைக்கும் மோட்சத்தை குறித்து சரியான விளக்கம் எந்த புத்தகத்திலும் இல்லை. ஆனால் உங்கள் சகோதரன் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தன் வாழ்வில் இதுவரைக்கும் நான்கு முறை மரணத்தை கடந்து வந்திருக்கிறார்கள்.

சகோதரர் 16-ம் வயதில் சயனைட் குடித்து இறந்து மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்டார். 32-ம் வயதில் மஞ்சள் காமாலை நோயினால் மரித்து, மீண்டுமாக இயேசுவால் ஜீவன் பெற்றுக்கொண்டார். மூன்றாவது முறை பயங்கரமான விபத்தில் இறந்து போனார். அவர் ஆத்துமா பரலோகம் சென்றபொழுது தேவ தூதர்கள், 'உங்கள் ஊழியம் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆகவே மீண்டும் உலகிற்கு செல்லும்படி பணித்தனர்.' 2023-ம் ஆண்டு தவறுதலாக கொடுக்கப்பட்ட மருந்தின் நிமித்தம் அவரது மூளை செயலிழந்து உயிரிழந்து, இயேசுவால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டார்.

நட்சத்திரங்களின் அற்புத படைப்புகள், சாத்தான் ஆண்ட நட்சத்திரம், எரிநரகம், பாதாளம் மற்றும் மாட்சிமையான பரலோகத்தை பற்றி தெளிவாக காண்பித்தார். அப்பொழுதே புத்தகம் எழுத முயற்சித்தப்பொழுது, ஆவியானவரோ "உனக்கு நான் பரலோக மாட்சிமையை காண்பித்தது போல உலகத்தில் இதுவரை எவருக்கும் காண்பித்தது இல்லை, எனினும் இந்த புத்தகத்தை உன்னுடைய 32ம் வயதில் எழுதாமல் (சுமார் 40 வருடங்களுக்கு முன்பு) இந்த கடைசி காலத்தில் எழுதும்படி கூறினார்". (இப்போது எனது வயது 73) அவரது கட்டளையின்படி இப்பொழுது இந்த அரிதான புத்தகம் எழுதப்பட்டு முடிந்தாயிற்று.

300 பக்கத்திற்கு மேலாக உள்ள இந்த புத்தகம் Designing, Editing மற்றும் அச்சடிக்க 2000 காப்பிகளுக்கு சுமார் 600 வீதம் 12 லட்சம் செலவாகிறது. இப்புத்தகம் அச்சிட்டு வெளியிட்டால் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். நித்திய ஜீவனை குறித்து அறிந்து கொள்வார்கள். பரலோகத்தின் மேன்மையை அறிந்து இயேசுவை விசுவாசித்து அவர் மூலமாக பிதா வாசம் செய்யும் பரலோகம் அடையலாம் என்ற எண்ணம் அவர்களுக்குள் வரும். எனவே இந்த புத்தகத்தை விசுவாசத்தோடு அச்சிட கொடுத்துள்ளோம். சகோதரனை அதிகமாக நேசிக்கிறவர்கள் ஒருசிலர் இப்புத்தகத்திற்கு உதவி செய்துள்ளார்கள். எனினும், இன்னும் பணத்தேவை உள்ளது. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி ஜெபத்துடன் தாங்குங்கள். மேலும், இப்புத்தகம் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் அச்சடிக்க வேண்டும்.

இப்புத்தகத்திற்கு உதவி செய்கிறவர்கள் அனுப்ப வேண்டிய
வங்கி கணக்கு எண்







செகந்திராபாத்தில்
அற்புத குடும்ப
ஆசீர்வாதக் கூட்டம் மற்றும்
விடுதலையின் ஜெபம்
நேரம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 4:00 மணி வரை
செப்டம்பர்
13
சனிக்கிழமை
இடம்
YMCA நியூ ஹால்,
யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்சவண்டு அருகில்,
S.P. ரோடு, செகந்திராபாத்
தேவசெய்தி மற்றும் ஜெபம்
Dr.ஆனந்த ஸ்திரா
Dr.ஜேன் ஜாஷ்வா
தொடர்புக்கு : 94888 45627 & 91770 87860
Local contact: Bro. Sylendra Moses, Cell: 76740 61601


திருச்சியில்
அற்புத குடும்ப
ஆசீர்வாதக்கூட்டம்
செப்டம்பர்
27
சனிக்கிழமை
நேரம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18
தொடர்புக்கு
9488845627, 0431-2741922
Dr.ஆனந்த ஸ்திரா
மற்றும் குடும்பத்தினர்
(கூட்ட முடிவில்
தனிஜெபம்
ஏறெடுக்கப்படும்)

திண்டுக்கல்லில்

# அற்புதத்தின் மாலை

செப்டம்பர்
**06**
[சனிக்கிழமை]

மாலை 5:00
மணி முதல்
இரவு 8:00
மணி வரை



தேவ செய்தி: Dr.ஆனந்த ஸ்திரா,

இடம்: ஹோட்டல் மஹாராஜோதி, பேருந்து நிலையம் மற்றும்
கணேஷ் தியேட்டர் அருகில், திண்டுக்கல்.

தொடர்புக்கு : 94888 45627 0431-2741922

தூத்துக்குடி

# பேரின்ப பெருவிழா



தினமும்
மாலை
7:00 மணி

செப்டம்பர்
**26,27**
[வெள்ளி, சனிக்கிழமை]

தேவ செய்தியாளர்: Rev.Dr.A. ஜாஷ்வா, அன்பரின் ஊழியம், திருச்சி.

இடம்: C.S.I தூய மிகாவேல் ஆலயம் அருகிலுள்ள திறந்த வெளி மைதானம்,
(Church near Open Ground) முதலூர், தூத்துக்குடி மாவட்டம்.

தொடர்புக்கு: Rev.K. செல்வன் மகாராஜா, சேகர குரு, முதலூர்.
செல்:9894884407